KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.25

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

குறுந்தொகையில் மடலேறுதல் - ஓர் உளவியல் பார்வை

Madaleruthal' in Kuruntokai: A Psychological Perspective

முனைவர் ப.கற்பகராமன்[1,*iD]

[1] உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் -05

***Corresponding author:** முனைவர் ப.கற்பகராமன், sonakarpagaraman@gmail.com

ORCID iD: முனைவர் ப.கற்பகராமன் https://orcid.org/0000-0003-1625-7209

ARTICLE INFO

Article history
Received: 11 October 2026
Revised: 12 October 2026
Accepted: 20 October 2026

Article ID
KIJTS-2026-0005

Peer review
Double-blind peer review

Keywords
Red tongue
teeth
delicate speech
young woman
garland of *erukku* (calotropis) flowers
tightly closed flower bud

ABSTRACT

Literature serves as an excellent mirror of its time. It is not merely the product of an author's imagination; rather, every literary work is embedded with the various events and circumstances of the era in which it was created—literature is, in essence, the written manifestation of such occurrences. Viewed through this lens, the practice of *madalēṟutal* (a symbolic act of public declaration of love, often involving a threat of self-mortification or social exposure) appears in the *Kuṟuntokai*—one of the *Caṅkam* (Sangam) literary anthologies—as a psychological element within the realm of *akam* (the genre concerning love and personal life). This practice was employed by the hero (*talaivan*) to persuade his beloved (*talaivi*) to accept his love, to gain the consent of her parents, or to enlist the help of her confidante (*tōḻi*) in facilitating meetings between the lovers. The poets have, in various instances, documented the social repercussions and events triggered by such acts of *madalēṟutal*. This study aims to examine and elucidate the poems within the *Kuṟuntokai* that pertain to this practice.

How to cite this article: முனைவர் ப.கற்பகராமன் (2026). குறுந்தொகையில் மடலேறுதல் - ஓர் உளவியல் பார்வை. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 318–328. https://doi.org/10.63300/kijts603112026.24
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் காதல் வாழ்க்கை, பண்பாடு, சமூக மரபுகள், உணர்வுகள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் சிறந்த இலக்கியங்களாகத் திகழ்கின்றன. அக இலக்கிய மரபில் காதல் நிறைவேறாத நிலையில் தலைவன் மேற்கொள்ளும் ஒரு செயலாக மடலேறுதல் குறிப்பிடப்படுகிறது. தலைவியின் அன்பைப் பெற இயலாமல் தவிக்கும் தலைவன்,

தனது காதலைப் பொதுமக்கள் அறியும்படி வெளிப்படுத்தி, சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியாக இதனைக் கருதலாம். குறுந்தொகையில் மடலேறுதல் குறித்த குறிப்புகள் இடம்பெறுவது, அக்காலக் காதல் மரபுகளையும் தலைவனின் மனநிலையையும் அறிய உதவுகிறது.

ஆய்வின் நோக்கம்

தலைவனின் காதல் உணர்வையும் மனப்போராட்டத்தையும் விளக்குதல். மடலேறுதல் வெளிப்படுத்தும் அக்காலச் சமூக மரபுகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் குறுந்தொகைப் பாடல்கள் வழி ஆராய்தல் ஆகியவை இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கங்களாக அமைந்துள்ளன.

ஆய்வு அணுகுமுறை

குறுந்தொகை பாடல்கள் வழி மடலேறுதலை விளக்கும் இந்த ஆய்வுக்கட்டுரை விளக்கமுறை திறனாய்விலும் உளவியல் முறை திறனாய்விலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உளவியல்

மனிதனின் மனநிலை, சிந்தனை, உணர்ச்சி, நினைவாற்றல், கற்றல், அறிவு, ஆளுமை மற்றும் நடத்தை ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் ஆராயும் துறையே உளவியல் ஆகும். மனிதன் ஏன் ஒரு குறிப்பிட்ட முறையில் சிந்திக்கிறான், உணர்கிறான், செயல்படுகிறான் என்பதைப் புரிந்துகொள்ள உளவியல் உதவுகிறது. உளவியல் என்பது மனிதனின் நடத்தை மற்றும் மனச் செயல்பாடுகளை அறிவியல் முறையில் ஆராயும் துறையாகும். உளவியல் நான்கு முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. மனிதனின் நடத்தை எவ்வாறு அமைகிறது என்பதை அறிதல்.
2. ஒரு குறிப்பிட்ட நடத்தை ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
3. குறிப்பிட்ட சூழலில் ஒருவர் எவ்வாறு செயல்படக்கூடும் என்பதை மதிப்பிடுதல்.
4. மனிதனின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவும் வகையில் நடத்தையைப் புரிந்துகொண்டு மேம்படுத்துதல்.

இவை மட்டுமின்றி, அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் கோபம், மகிழ்ச்சி, பயம், கவலை போன்ற உணர்வுகளைப் புரிந்துகொள்ள உளவியல் உதவுகிறது. பிரச்சினைகளை நிதானமாக அணுகுதல், பிறருடைய உணர்வுகளை மதித்தல், முடிவுகளைச் சிந்தித்து எடுத்தல் போன்ற திறன்களை வளர்ப்பதற்கும் உளவியல் துணைபுரிகிறது. இத்தகைய உளவியல் பார்வையில் மடலேறுதலை ஆராயும்போது காதல் சார்ந்த உளவியலின் தன்மைகளை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும்.

மடலேறுதல்

பனைமரத்தின் மடல் அல்லது பனை ஓலையால் குதிரை போன்ற உருவத்தை அமைத்து, அதனைப் பயன்படுத்திக் காதல் நிறைவேறாத தலைவன் தன் காதலை

ஊரறிய வெளிப்படுத்தும் மரபு மடலேறுதல் எனப்படுகிறது. இது காதல் நிறைவேறாத சூழலில் தலைவன் மேற்கொள்ளப்போவதாகக் கூறும் செயலாகவும் சங்கப் பாடல்களில் இடம்பெறுகிறது. மடலேறுதல் என்பது தனிப்பட்ட காதல் உணர்வைச் சமூகத்தின் முன் வெளிப்படுத்தும் செயலாகும். தலைவியின் தோழி, தலைவனின் காதலுக்கு உடன்படாதபோது அல்லது தலைவியை அடைவதற்கான முயற்சிகள் பலனளிக்காதபோது, தலைவன் மடலேறுவதாகக் கூறுகிறான். இதன் மூலம் தனது காதலின் தீவிரத்தை வெளிப்படுத்துவதோடு, தலைவியின் குடும்பத்தினரையும் ஊராரையும் தன் காதல் குறித்து எண்ணச் செய்ய முயல்கிறான். இத்தகைய மடலேறுதல் குறித்த செய்திகள் குறுந்தொகைப் பாடல்களில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை ஆராய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

மடலேறுதலும் சமூகமும்

சங்ககாலச் சமூகத்தில் காதல் என்பது தனிப்பட்ட உணர்வாக மட்டுமல்லாமல், குடும்பம் மற்றும் ஊரார் ஆகியோரின் கருத்துகளுடன் தொடர்புடையதாகவும் இருந்தது என்பதை இப்பாடல்கள் காட்டுகின்றன. மடலேறுதல் மூலம் தலைவன் தனது காதலை மறைநிலையிலிருந்து பொதுநிலைக்கு எடுத்துச் செல்கிறான். இதனால் காதலின் நிறைவேற்றத்தில் சமூகத்தின் பங்கும் வெளிப்படுகிறது.

மடலேறுதல் உணர்த்தும் காதல் உளவியல்

குறுந்தொகைப் பாடல்களில் மடலேறுதல் காதல் உளவியலின் ஒரு வெளிப்பாடாக அமைகிறது. காதல் நிறைவேறாதபோது தலைவன் எதிர்கொள்ளும் மனத்துயரம், ஏக்கம், நம்பிக்கை, சமூக அங்கீகாரத்தைப் பெறும் விருப்பம் ஆகியவை இதில் வெளிப்படுகின்றன. மடலேறுவதாகக் கூறும் தலைவன், தனது காதல் உண்மையானது என்பதை மற்றவர்களுக்கு உணர்த்த விரும்புகிறான். அதேவேளையில், தலைவியின் மனநிலையையும் அவளது குடும்பத்தின் அணுகுமுறையையும் மாற்ற முயல்கிறான். எனவே, மடலேறுதல் என்பது காதலின் தீவிரத்தை வெளிப்படுத்தும் உளவியல் சார்ந்த இலக்கிய உத்தியாகவும் விளங்குகிறது.

குறுந்தொகையில் மடலேறுதல் குறித்த பாடல்கள்

குறுந்தொகையில் மடலேறுதல் தொடர்பாக 14, 17, 32, 173, 182 ஆகிய ஐந்து பாடல்கள் சுட்டப்படுகின்றன. இப்பாடல்கள் தலைவனின் காதல் வேட்கை, மனத்துயரம், நாணத்தைப் புறந்தள்ளும் மனநிலை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன.

தன்னுடைய காதலுக்குத் தலைவியின் தோழி உதவ மறுத்த நிலையில், தலைவன் மடலேறி ஊரார் அறியத் தனது காதலை வெளிப்படுத்துவதாகக் கூறுகிறான். இதன் மூலம் தனது காதலின் தீவிரத்தை வெளிப்படுத்துவதாக தொல்கபிலர் அவர்கள் குறிஞ்சித்திணையில்,

“அமிழ்து பொதி செந்நா அஞ்ச வந்த

வார்ந்து இலங்கு வை எயிற்றுச் சின்மொழி அரிவையைப்

பெறுகதில் அம்ம யானே! பெற்றாங்கு

அறிகதில் அம்ம, இவ்வூரே! மறுகில்

நல்லோள் கணவன் இவன் எனப்

பல்லோர் கூற யாஅம் நாணுகம் சிறிதே"

(குறுந்தொகை பாடல் எண் -14)

என்று பாடுகின்றார். இப்பாடல் மடலேறுதலை உளவியல் தன்மையில் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பாடலில் அமிழ்தம் போன்ற இனிமையான மொழியையும், சிவந்த நாக்கையும், கூர்மையான பற்களையும் உடையவளும், குறைவாகப் பேசும் இயல்புடையவளுமான என் தலைவியை நான் அடைய விரும்புகிறேன். அவளை அடைந்த பிறகு, இவ்வூரின் தெருக்களில் செல்லும்போது, பலரும் "இவன் நல்ல பெண்ணின் கணவன்" என்று கூறுவார்கள். அப்போது நானும் அவளும் சிறிது நாணமடைவோம் என்று குறிப்பிடுகின்றான். இதன்மூலம் தன்னுடைய காதலுக்கு மறுப்பு தெரிவிக்கும் தலைவியின் தோழிக்குத் தான் மடலேறி தன்னுடைய காதலை உலகிற்குத் தெரிவிப்பேன் என்பதைச் சொல்லாமல் சொல்கின்றான்.

மற்றொரு பாடலிலோ, காதல் மிகவும் முதிர்ச்சி அடைந்தால் அக்காதலுக்குப் பல்வேறு தடைகள் ஏற்பட்டால் காதலன் எவ்வாறு மடலேறுவான் என்பதையும், காதலன் மடலேறுவதால் என்னென்ன தீங்குகள் உண்டாகும் என்பதையும் மிக அழகாக எடுத்துக்கூறுகின்றார் அதன் ஆசிரியர்.

"மாவென மடலும் ஊர்ப; பூவெனக்

குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;

மறுகின் ஆர்க்கவும் படுப;

பிறிதும் ஆகுப — காமம் காழ்க்கொளினே" (குறுந்தொகை பாடல் எண் -17)

இப்பாடல் மடலேறுதல் என்னும் சங்ககாலக் காதல் மரபை எடுத்துரைக்கிறது. தலைவன் தலைவியைக் காதலிக்கிறான். அவளை அடைவதற்குத் தோழியின் உதவியை நாடுகிறான். ஆனால் தோழி அவனது வேண்டுகோளை ஏற்கவில்லை. இதனால் தலைவன் தனது காதல் மிகவும் தீவிரமாக இருப்பதைத் தோழிக்கு உணர்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

காதல் மிகவும் முதிர்ச்சியடைந்தால், தலைவன் பனைமடலால் செய்யப்பட்ட குதிரையைப் போன்ற அமைப்பில் ஏறி ஊர்ந்து செல்வான். எருக்கம்பூவால் செய்யப்பட்ட மாலையை அணிவான். அவ்வாறு தெருவில் செல்லும்போது ஊரார் ஆரவாரம் செய்வார்கள்; பலவிதமான பழிச்சொற்களையும் எதிர்கொள்ள நேரிடும்

என்று இப்பாடல் மூலம் மடலேறுவதால் சமூகத்தில் எத்தகைய விளைவுகள் உண்டாகும் என்பதை தலைவன் விளக்குகின்றான்.

மற்றொரு பாடலிலோ, தலைவன் தலைவியைக் காதலிக்கிறான். அவளை அடைவதற்குத் தோழியின் உதவியை நாடுகிறான். ஆனால் தோழி உடனடியாக உடன்படாததால், தன் காதலின் ஆழத்தையும் பிரிவினால் ஏற்படும் துயரத்தையும் தலைவன் அவளிடம் எடுத்துரைக்கிறான். இப்பாடலில மடலேறுவது தவறு என்று தலைவனே குறிப்பிடுகின்றான். அதாவது தலைவி கிடைக்கவில்லை என்பதற்காக நான் மடலேறுதல் மேற்கொண்டால் அதனால் ஏற்படும் ஊர் அலரால் தலைவிக்குத் துயர் ஏற்படும். அதனால் அச்செயல் செய்வது தவறு என்று அவன் தோழியிடம் கூறுவதை,

“காலையும், பகலும், கைஅறு மாலையும்,

ஊர் துஞ்சு யாமமும், விடியலும் என்றி,

பொழுதிடை தெரியின், பொய்யே காமம்;

மாவென மடலொடு மறுகில் தோன்றித்

தெற்றெனத் தூற்றலும் பழியே,

வாழ்தலும் பழியே, பிரிவுதலை வரினே!” (குறுந்தொகை பாடல் எண் -32)

என்ற அள்ளூர் நன்முல்லையார் பாடல் மூலம் உணர முடிகின்றது.

காலையும் பகலும், செயலற்றுக் கிடக்கும் மாலையும், ஊரே உறங்கும் இரவும், விடியற்காலையும் என்று பொழுதுகளைத் தனித்தனியாக உணரக்கூடிய நிலை எனக்கு இருந்தால், என் காதல் உண்மையானதாக இருக்காது. தலைவியைப் பிரிந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டால், என் காதலை ஊரறிய வெளிப்படுத்தி, பிறர் பழித்துப் பேசுவதற்கும் ஆளாவது பழிதான்; அதேபோல், அவளைப் பிரிந்து வாழ்வதும் எனக்குப் பழிதான் என்று தலைவன் தோழியிடம் கூறுகிறான். என்று கூறுவதன்மூலம் மடலேறுதல் தவறு என்று தலைவன் குறிப்பிடுகின்றான்.

மற்றொரு பாடலில் தனது உள்ளத்தில் வளர்ந்து வரும் காதல் துன்பத்தை ஊரார் அறியச் செய்வதற்கு மடலேறுதலைப் பயன்படுத்தியுள்ளான் என்ற செய்தியை,

“பொன் நேர் ஆவிரைப் புது மலர் மிடைந்த

பன் நூல் மாலைப் பனை படு கலி மாப்

பூண் மணி கறங்க ஏறி நாண் அட்டு

அழி படர் உள் நோய் வழி வழி சிறப்ப

இன்னள் செய்தது இது என முன் நின்று

அவள் பழி நுவலும் இவ்வூர்

ஆங்கு உணர்ந்தமையின் ஈங்கு ஏகுமார் உளெனே.”

(குறுந்தொகை பாடல் எண் -173)

என்ற பாடல் வரிகளின் மூலம் உணர முடிகின்றது.

இப்பாடலில், புதிய ஆவிரைப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிவித்து, மணிகள் ஒலிக்கின்ற பனைமடல் குதிரையில் ஏறி, தனது நாணத்தைப் புறந்தள்ளி ஊரார் முன்னிலையில் தோன்றுவேன் என்றும் மற்றும், தனது உள்ளத்தில் வளர்ந்து வரும் காதல் துன்பத்தை ஊரார் அறியச் செய்து, தலைவியின் செயலால் தான் இந்நிலைக்கு வந்ததாக அவர்கள் முன் கூறுவேன் என்றும் தோழியிடம் கூறுகின்றான்.

மற்றொரு பாடலிலோ, தலைவனின் மனப்போராட்டம் வெளிப்படையாகப் பதிவாகிறது. ஒருபுறம் காதலின் தீவிரம் அவனை மடலேறத் தூண்டுகிறது; மறுபுறம் சமூகத்தின் கேலிக்கும் அவமதிப்புக்கும் ஆளாக வேண்டிய நிலை அவனுக்கு ஏற்படுகிறது. தன் காதல் துன்பத்தால் மனம் இரங்காத தலைவியை அடைவதற்கு இதுவே தகுந்த தூதாக அமைத்துப் பாடுவதை,

“விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்

மணி அணி பெருந்தார் மரபின் பூட்டி

வெள் என்பு அணிந்து பிறர் எள்ளத் தோன்றி

ஒரு நாள் மருங்கில் பெரு நாண் நீக்கித்

தெருவின் இயலவும் தருவது கொல்லோ

கலிழ்ந்து அவிர் அசை நடைப் பேதை

மெலிந்திலள் நாம் விடற்கு அமைந்த தூதே.”

(குறுந்தொகை பாடல் எண் -182)

என்ற பாடல் வரிகளில் உணர முடிகின்றது. மடலேறுதல் குறித்துப் பாடியதாலேயே இப்பாடலில் ஆசிரியருக்கு மடல் பாடிய மாதங்கீரனார் என்ற பெயர் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாடலில், முதிர்ந்த பனைமடலால் அமைந்த குதிரையை மணிகளாலும் பெரிய மாலையாலும் அலங்கரித்து, வெள்ளிய எலும்பு அணிகலனை அணிந்து, பிறர் எள்ளிப் பேசினாலும் அதனைப் பொருட்படுத்தாமல் தெருவில் தோன்றுவேனோ என்று தலைவன் தனது நெஞ்சிடம் கேட்பதாக ஆசிரியர் அமைத்துப் பாடுகின்றார்.

முடிவுரை

குறுந்தொகை உணர்த்தும் மடலேறுதல், சங்ககாலக் காதல் மரபின் தனித்துவமான கூறாகும். தலைவியின் அன்பைப் பெற இயலாத தலைவன், தனது காதல் துன்பத்தை வெளிப்படுத்தி, சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியாக மடலேறுதலை முன்வைக்கிறான். குறிப்பாக, குறுந்தொகை 173 தலைவனின் உள்ளத்துயரத்தையும் பொதுவெளியில் காதலை வெளிப்படுத்தும் நோக்கத்தையும் எடுத்துரைக்கிறது. குறுந்தொகை 182 நாணம், பிறரின் கேலி, காதல் வேட்கை ஆகியவற்றுக்கு

இடையிலான முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. எனவே, மடலேறுதல் என்பது காதலின் தீவிரம், மனப்போராட்டம், சமூக அங்கீகார வேட்கை ஆகியவற்றை ஒருங்கே வெளிப்படுத்தும் உளவியல் சார்ந்த கூறு என முடிவுசெய்யலாம்.

துணைநூற்பட்டியல்

References

உ. வே. சாமிநாதையர், குறுந்தொகை மூலமும் உரையும், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

பொ. வே. சோமசுந்தரனார், குறுந்தொகை உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

குறுந்தொகை 1–200, Learn Sangam Tamil. இணையப் பாடல் உரைத் தொகுப்பு.